# சு.சமுத்திரத்தின் ‘வாடாமல்லி’ புதினத்தில் பழமொழிகள் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

**ம.ஹரிகிருஷ்ணன்,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்),
பதிவு எண்: AATAM147/2018 ,முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி - 635001.
பெரியார் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, சேலம் – 636011.

**முனைவர்அ.திலகவதி,**
இணைப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி - 635001.
பெரியார் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, சேலம் – 636011.

**ஆய்வுச்சுருக்கம்:**
தமிழில் பல்வேறு வகைமையிலான இலக்கியங்கள் தோன்றி பல நிலைகளில் வளர்ச்சி அடைந்து வருகின்றன. அவ்வகையில், தமிழில் தோன்றிய இலக்கியங்களில் ஒன்று புதின இலக்கியமாகும். அப்புதின இலக்கியங்களில் குறிப்பிடத்தகுந்தவரும், திருநெல்வேலி மாவட்ட எழுத்தாளரும், சாகித்ய அகாதெமி விருதுப் பெற்றவருமானவர் சு.சமுத்திரம் அவர்கள். அவரின் படைப்புகளில் ஒன்றான ‘வாடாமல்லி’ எனும் புதினத்தில் பழமொழிகள் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகளை இனங்கண்டு அதனை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள் :** தொல்காப்பியம்,பழமொழி நானூறு,பழமொழி,புதினம்,வாடாமல்லி.

## முன்னுரை

சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலும் எண்ணற்ற இலக்கியங்கள் தமிழ்மொழியில் தோன்றி வளர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றில் புதின இலக்கியமும் ஒன்று. இப்புதின இலக்கியம் கி.பி.19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் வளரத் தொடங்கியது. இப்புதின இலக்கியத்தைப் பலரும் படைத்தளித்துள்ளனர். அப்புதினப் படைப்பாளர்களில் தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக்கொண்டவர் சு.சமுத்திரம் அவர்கள். இவருடைய பதினான்கு புதினங்களில் ஒன்றான ‘வாடாமல்லி’ எனும் புதினத்தில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் கூறும் வாழ்வியல் சிந்தனைகளை ஆய்ந்து வெளிக்கொணரும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**பழமொழி**

பழமொழி என்பதற்கு, 'பழமையான மொழி', 'மூத்தோர் மொழி' என்பது பொருள் ஆகும். இப்பழமொழியைத் தொல்காப்பியர் 'முதுசொல்' எனவும் ; 'முதுமொழி' எனவும் குறிப்பிடுகிறார். இதனை,

**"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே**
**அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்**
**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்**
**நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்**
**யாப்பின் வழிய தென்மனார் புலவர்"(தொல்.செய்யுளியல்,78)**

- எனும் நூற்பாவின் மூலம் அறியமுடிகிறது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முன்றுரைஅரையனார் **'பழமொழி நானூற்றில்'** ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியை எடுத்தாண்டு மிக உயரிய அறத்தை வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. இம்முறைமை தற்கால இலக்கியவாதிகளிடத்தும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. இது பழமொழியின் செல்வாக்கினை அறிவுறுத்துகிறது. அவ்வகையில், தொல்காப்பியர் காலத்திற்கும் முந்தைய காலக்கட்டதில் இருந்தே மக்கள் தாங்கள் கூற நினைக்கும் கருத்துகளைச் 'சுருங்கக்கூறி விளங்க வைக்கும்' உத்திகளில் ஒன்றான பழமொழியை எடுத்தாண்டிருக்கின்றனர் என்பதை இதன்வழி அறியமுடிகிறது.

தொல்காப்பியர் காலத்திற்கும் முந்தைய காலகட்டத்தில் இருந்தே இருக்கும் இம்முதுசொல்லினை சு.சமுத்திரம் அவர்கள் 'வாடாமல்லி' புதினத்தில் பல இடங்களில் எடுத்தாண்டிருக்கிறார். அப்பழமொழிகளின் மூலம் தாம் கூறக்கருதி கருதுகளை வெளிக்கொணர்ந்து தம்முடைய கருத்துகளுக்கு வலுசேர்த்திருப்பதைக் காணமுடிகிறது.

**வாடாமல்லி புதினம் :**

**1.துஷ்டனைக் கண்டால் தூர விலகு**

'வாடாமல்லி' எனும் புதினத்தின் கதைத்தலைவன் சுயம்பு. அவன் சென்னையில் என்ஜினியரிங் கல்லூரியில் படிக்கிறான். அங்கு படித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் அவன் திருநங்கையாக மாறிவருகிறான் என்பதை உணர்கிறான். இதன் காரணமாக, கல்லூரியில் தொடர்ந்து படிக்க மனமில்லாமல் வீட்டிற்குத் திரும்புகிறான். அவ்வாறு அவன் அவனது ஊரான நல்லாம்பட்டிக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது வழியில் ஒரு சவுக்குத் தோப்பு வருகிறது. அந்த சவுக்குத் தோப்பு வழியாக கோபத்துடனும் விரக்தியுடனும் நடந்து சென்று கொண்டிருக்கும்போது, அவனைக் கண்ட நாய் ஒன்று விலகிச் செல்கிறது. அவ்வாறு விலகிச் செல்வதைக் கண்டவன்,

**"துஷ்டனைக் கண்டால் தூர விலகு"(வாடாமல்லி,ப.14)**

- என்பதைப்போல விலகிச் செல்கிறது என்கிறான்.

இப்பழமொழியின் மூலம் தனக்கு ஆகாதவர்கள் எதிரில் வரும்போது அவர்களைக் கண்ட உடன் விலகிச் செல்வது அனைவருக்கும் நலம் என்பதை உள்ளுறையாக ஆசிரியர் கூறுவதைக் காணமுடிகிறது. காரணம், விரக்தியின் உச்சத்தில் கோபத்தோடு நடந்துவரும்

சுயம்பு அவனது கோபத்தை எதிரில் வரும் நாயிடம் காண்பிக்கவும் வாய்ப்பிருக்கிறது. அதனால் கோபத்தோடு நெருங்கும் ஒருவரைக் கண்டால் நாம் இந்த நாயைப்போல, துஷ்டனைக் கண்டால் தூரம் ஒதுங்குவது அனைவருக்கும் நலம் தருவதாய் அமையும் எனும் உயரிய வாழ்வியல் சிந்தனையை இப்பழமொழியின் மூலம் ஆசிரியர் வலியுறுத்துவதை அறியமுடிகிறது.

### 2.எருதுக்கு நோவாம் காக்கைக்குக் கொண்டாட்டமாம்

கதைத்தலைவன் சுயம்புவின் தந்தை 'பிள்ளையார்' ஆவார். தன்னுடலில் உண்டாகும் மாற்றத்தைக் கவனித்த சுயம்பு, கல்லூரிக்குச் செல்ல மாட்டேன் என்று வீட்டிற்கு வந்துவிடுகிறான். வீட்டிற்கு வந்தவனிடம் அவனுடைய தந்தை அறிவுரை கூறுகிறார். அவ்வாறு அறிவுரை கூறிக்கொண்டிருக்கும்போது அந்தப் பக்கமாக அவனது தம்பியும் தம்பியினது மனைவியும் ஆனந்தமாய் பேசிக்கொண்டிருக்கின்றனர். அதைக் கண்ட பிள்ளையார்,

**"எருதுக்கு நோவாம் காக்கைக்குக் கொண்டாட்டமாம்"(வாடாமல்லி,ப.19)**

என்று கூறுகிறார். அதாவது, ஒரே வீட்டில் பிறந்து வளர்ந்த பிள்ளைகளாக இருக்குபோதும் சிலர் தங்களது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களோடு (தந்தை, மகன், சகோதரன்) ஒரு இடைவெளியை வைத்தவாறே வாழ்வர். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் பாதிக்கப்படும்போது மற்றொரு தரப்பினருக்கு அதைப் பற்றிய பெரிய வருத்தமோ துன்பமோ ஏற்படுவதில்லை. இச்சூழலில் சம்மந்தப்பட்டர் வலியோடு இருப்பர். இதைக் கண்ணுறும் பெரியவர்கள் நெஞ்சுழிவர். இம்மெய்ம்மையை எடுத்துரைக்கும் வகையில் ஆசிரியர் இப்பழமொழியை எடுத்தாண்டிருக்கிறார்.

### 3.நூலைப்போல சேலையாம் தாயைப்போல பிள்ளையாம்

திருநங்கையாக மாறிய சுயம்பு மீண்டும் கல்லூரிக்குச் செல்ல மறுக்கிறான். அதைக் கண்ட தந்தை பிள்ளையாரும் ; அண்ணன் ஆறுமுகப்பாண்டியும் சுயம்புவைத் திட்டுகின்றனர். எவ்வளவு சொல்லியும் கல்லூரிக்குச் செல்ல சுயம்பு மறுக்க, ஒரு கட்டத்தில் பிள்ளையார், கையில் தடியை எடுத்துச் சுழட்டியவராய் அவனைக் கோபமாய் நெருங்கி வர அவனது தாய் வெள்ளையம்மாள் 'இதற்கொன்றும் குறைச்சலில்லை' என்று பொறுமுகிறாள். இச்சூழலில் அண்ணன் ஆறுமுகப்பாண்டி சுயம்புவிடம் மிகக்கடுமையாக நடந்து கொள்கிறான். அப்போது அவனது மனைவி கோமளம்,

**"இவ்வளவு பணம் போட்டு உன்னை எதுக்காக படிக்கவைத்தோம்! இந்த மூணு மாதத்துல, ஹாஸ்பிட்டலுக்கே மாதா மாதம் எழுநூறு ரூபா ஆகியிருக்கு. புத்தகம், பீஸுன்னு தனியா மூவாயிரம். ஒங்கப்பா, வீட்ல இருக்க வேண்டிய இந்த வயசுல, காட்ல கிடக்கார். ஒங்க அண்ணன் காலையில வயலுக்குப் போயிட்டு ராத்திரிக்குத்தான் வாறவரு. இந்த ஊர இன்னிக்குத்தான் பகலுல பாக்காரு. அதுவும் நீ வில்லடிக்கிறதால. நாங்க படுற பாட்டை நினைச்சுப் பார்த்தால், உனக்கு எப்படி மனசு இல்லாமப் போகும்?"(வாடாமல்லி,ப.27)** – எனக்கூறுகிறாள். அதற்கு மீண்டும் அவனது தாய்

அவனுக்கு ஆதரவு நல்கும் வகையில், 'சித்தம் கலங்கியிருப்பவனை' ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறீர்கள் ? என்று கூற, வெகுண்டெழுந்த ஆறுமுகப்பாண்டி,

**"ஒன் மருமகள் நகையை அடகு வெச்சுத்தான் காலேஜீக்கு பணம் கட்டுனோம்" (வாடாமல்லி,ப.28)** என்கிறான். இதைக்கேட்ட மரகதம், "இப்படியெல்லாம் நாளை பிரச்சன வரக்கூடாது என்பதற்காகத்தான் தந்தை பிள்ளையார் ஆறு மரக்கால் விதப்பாட்டை விட்டுக்கொடுத்திருக்கிறார். விதைத்து அறுவடை செய்து கொண்டு கொஞ்சம் பணத்தைத்தான் தம்பிக்குக் கட்டுகிறாய்" என்கிறாள். இதைச் சற்றும் எதிர்பார்க்காத பிள்ளையார்,

**"நூலைப்போல சேலையாம் தாயைப்போலப் பிள்ளையாம்"(வாடாமல்லி,ப.28)**

- என்று மகள் மரகதத்தின் வாயையும் மனைவி வெள்ளையம்மாளின் வாயையும், மருமகள் கோமளத்தின் வாயையும் அடக்குகிறார்.

குடும்ப உறவுகளுக்குள் பிரச்சனை வரும் போது ஒருவர் மற்றவர்க்குச் சார்பாக பேசுவது இயல்பே. எனினும், அக்கூற்றானது குடும்பத்தைச் சிதைக்கும் வகையிலோ அல்லது பிரச்சனையை மேலும் பெரிதாக்கும் வகையிலோ அமையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றவர்களின் கடமை. சில நேரங்களில் பெற்றவளே ஒருவருக்குச் சாதகமாக நின்று பேசும் சூழலும் ; அவளையொட்டி அவளது மகள் பேசும் சூழலும் நிகழும். அத்தருணத்தில் தந்தையர் தன் மகளின் விவாதப் போக்கினைத் தடுக்க இது போன்ற பழமொழிகளை எடுத்தாள்வர். இவ்வுயரிய பழமொழியை ஆசிரியரும் குடும்ப உறவுகளுக்குள் நிகழும் பிரச்சனையைத் தடுத்து நிறுத்த பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது.

**4.பால் கொடுக்கிற மாட்டை பல்லைப் புடுங்கிப் பார்க்காதீங்க**

சுயம்பு சென்னையில் உள்ள ஒரு இன்ஜினியரிங் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறான். அப்போது அவன் திருநங்கையாக மாறியதை உணர்கிறான். அத்தருணத்தில் அவன் படிக்கும் கல்லூரியில் கூடைப்பந்து போட்டி நடக்கிறது. அவன் அப்போட்டியைக் காண கல்லூரி விளையாட்டு மைதானத்திற்குச் செல்கிறான். அங்குச் சென்று ஓர் இடத்தில் அமருகிறான். அவனருகில் மருத்துவம் படிக்கும் மாணவி ஒருத்தி அமர்ந்து கொண்டு விளையாட்டை இரசித்துக்கொண்டிருக்கிறாள். அருகில் உள்ள மாணவியிடம் விளையாட்டில் ஆடும் ஒரு மாணவனைப் பார்த்து 'அவரு ரெம்ப நல்லா ஆடுறார் இல்லியா? இப்படி யாரும் ஆடி நான் பார்க்கலை. ஆமா இவரு பேரு என்ன ?' என்றுக் கேட்கிறான்.

அதற்கு அந்த மாணவி 'தள்ளி நில்லுடா ராஸ்கல். என்னடா நினைச்சுக்கிட்ட?' என்று கூச்சலிடுகிறாள். உடனே அங்கு வந்த மருத்துவ மாணவர்கள் கூட்டம் அவனைச் சரமாரியாக தாக்குகின்றனர். அப்போது அங்கு வந்த மருத்துவ மாணவர் 'டேவிட்', சுயம்புவை அம்மாணவர்களிடமிருந்து மீட்டு 'விசாரணையில்லாமல் யாரையும்

அடிக்கக்கூடாது' என்கிறான். அப்போது அந்தப் பெண் மீண்டும் என்னைக் காப்பாற்றாமல் அந்த சுயம்புவைக் காப்பாற்றுகிறானே என்னைக் காப்பாற்ற யாருமில்லாமல் அநாதையாகிவிட்டேனே' என்று கூச்சலிடுகிறாள். அக்கூட்டத்தை முண்டியடித்துக் கொண்டு சுயம்புவின் நண்பர்களான, மூர்த்தியும், முத்துவும் அங்கு வருகின்றனர். வந்தவர்கள் எம்.பி.பி.எஸ் மாணவர்களிடம்,

**"இவன் எங்க கிளாஸ்மேட். அதோட ரூம்மேட். எலெக்ட்ரானிக் அண்ட் டெலிகம்யூனிகேஷன் கோர்ஸிலே பஸ்ட் இயர் படிக்கான். கொஞ்ச நாளாவே மனசு சரியில்ல. வேணுமுன்னு செய்திருக்க மாட்டான். இந்த தடவை விட்டுடுங்க" (வாடாமல்லி,ப.43)** என்று மன்றாடுகின்றனர்.

மூர்த்தியும், முத்துவும் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த டேவிட், அவனுக்குத் தெரிந்த மருத்துவர் ஒருவரான சைக்கியாட்ரிஸ்ட் டாக்டர் பரமசிவத்திடம் அழைத்துச் செல்லுங்கள் இவனுக்கு மனம் பாதிக்கப்பட்டுள்ளது. இவனை அங்கு கொண்டு சென்றால் விரைவில் குணப்படுத்திவிடலாம் என்று மனிதநேய மாண்புடன் கூறுகிறான். அதனைக் கண்டுகொண்டிருந்த மருத்துவம் பயிலும் மாணவர்கள் 'நீ என்ன பெரிய தலைவனா?' என்று கேட்கின்றனர்.

அதற்கு டேவிட், **"பால் கொடுக்கிற மாட்டை பல்லைப் புடுங்கிப் பார்க்காதீங்க" (வாடாமல்லி,ப.46)** என்ற பழமொழியைக்கூறி, ஒருவர் தன்னிலை அறியமால் தடுமாறும்போது, அவருக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமே தவிர அதைவிட்டு, என்னைப்போன்று பிறருக்கு வழி காட்டுபவர்களைப் பற்றி தவறாகப் பேச வேண்டாம் எனக்கேட்டுக்கொள்கிறான்.

நம்முடைய வாழ்வில் நமக்கு பல இன்னல்கள் ஏற்படும். அப்போது நாம் மனதெளிவுடன் செயல்பட வேண்டும். அச்சூழலில் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழியைப் பலரும் கூறுவர். அவ்வாறு கூறுபவரின் கூற்றில் உள்ள நன்மைகளை ஆராய்ந்து பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமே தவிர அதைத்தவிர்த்து தீர்வு கூறுபவரைப் பற்றி தவறாக விமர்சித்தல் தவறு எனும் உயரிய வாழ்வியல் நெறியை ஆசியரியர் 'டேவிட்' எனும் பாத்திரம் வழி எடுத்துரைப்பதை அறியமுடிகிறது.

### 5.கிளியை வளர்த்து பூனைகிட்ட கொடுக்கறதுக்கு சமானம்

நல்லாம்பட்டி எனும் ஊரில் வசித்து வருபவர் பிள்ளையார். அவருக்கு ஆறுமுகப்பாண்டி, சுயம்பு என்ற மகன்களும் மரகம் என்ற மகளும் இருக்கின்றனர். பிள்ளையாரின் இளைய மகன் சுயம்பு சென்னையில் இன்ஜினியரிங் கல்லூரியில் படித்து வருகிறான். சுயம்புவின் அக்கா மரகதம். மரகதத்திற்கு வீட்டில் மாப்பிள்ளையைப் பார்க்கின்றனர். அதே ஊரைச் சேர்ந்த பூக்கடை அருணாச்சலம் என்பவர் மகன் வாத்தியார் மலைச்சாமி பாண்டியன் என்பவர்தான் மாப்பிள்ளை. மாப்பிள்ளையைப் பற்றி அறிந்து கொள்ள மரகதத்திற்கு ஆவல் ஏற்படுகிறது. எனவே தனது தம்பி சுயம்புவிடம் மாப்பிள்ளையைப் பற்றி அறிந்து வருமாறு சொல்கிறாள். தம்பி சுயம்புவும் அக்காவிற்கு வரப்போகும் மாப்பிள்ளையைப் பற்றி அறிந்து கொள்ள புறப்படுகிறான்.

சுயம்பு மாப்பிள்ளை வீட்டைச் சென்றடைகிறான். அவரது வீட்டில் உள்ள அருணாச்சலத்திடம் தான் யார் ? எதற்கு இங்கு வந்தேன் ? என்ற செய்தியைக் கூறுகிறான். அவரும் சுயம்புவை வரவேற்று அமர வைக்கிறார். அருணாச்சலம் தனது மகளை அழைத்து பெண்வீட்டில் இருந்து மணப்பெண்ணின் தம்பி வந்துள்ளார். அவருக்கு குடிக்க மோர் தருமாறு கூறுகிறார். இதனைக் கேட்ட அவரது மகள் சுயம்புவிற்கு மோர் கொண்டு வந்து கொடுக்கிறாள். அப்போது அந்த மோரை வாங்கி சுயம்பு குடிக்கிறான். பிறகு, மாப்பிள்ளை தங்கையிடம், 'மாப்பிள்ளை யார்? அவரை நான் பார்க்க வேண்டும்' எனக் கேட்கிறான். அதற்கு அவள் 'நீங்களே கண்டுபிடியுங்க பார்ப்போம்' என்கிறாள். உள்ளிருந்து இரண்டு ஆண்கள் அவரை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களைக் கண்ட சுயம்பு,

**"கிளியை வளர்த்து பூனைகிட்ட கொடுக்கறதுக்கு சமானம்"(வாடாமல்லி,ப.56)**

- என்று தன் மனதிற்குள் முணங்குகிறான்.

அதற்கு மாப்பிள்ளையின் சகோதரி இவர்களில் ஒருவர், என் கணவர், மற்றொருவர் என் சின்ன அண்ணன். உங்க அக்காவுக்கு பார்த்திருக்கும் மாப்பிள்ளை என் பெரிய அண்ணன் வாத்தியார் மலைச்சாமி என்றுக் கூறி சுயம்புவின் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறாள்.

ஒரு குடும்பத்தில் திருமணம் நடைபெறுகிறது என்றால் அனைவரும் மிக கவனத்துடனும், அக்கறையுடனும் அத்திருமணத்தை நடத்த எண்ணிச் செயல்படுவர். அவ்வாறு நடத்த முற்படும் திருமணத்தில் ஒவ்வொரு செயலையும் நிதானித்து முடிவெடுப்பது சாலச் சிறந்த பலனைக் கொடுக்கும். அவ்வாறு இல்லாமல் அவசரப்படுதல் நல்லதல்ல என்பதனைப் புரியவைக்க ஆசிரியர், 'வாடாமல்லி' எனும் இப்புதினத்தில் இப்பழமொழியை எடுத்தாண்டிருக்கிறார். மரகம் என்பவளுக்கு மாப்பிள்ளை பார்க்கின்றனர். அத்தருணத்தில் மாப்பிள்ளை பற்றி அறிய மரகத்தின் தம்பி மாப்பிள்ளை வீட்டிற்கு செல்கிறான். அங்குச் சென்ற சுயம்பு இப்படி அழகில்லாத சிடு மூஞ்சான ஒருவரையும், கரி மூஞ்சான ஒருவரையும் கண்டு மாப்பிள்ளை எனத் தவறாக எண்ணி, இவர்களில் ஒருவருக்கு தன் அக்காவை திருமணம்செய்து தருவது, "**கிளியை வளர்த்து பூனைகிட்ட கொடுக்கறதுக்கு சமானம்(வாடாமல்லி,ப.56),"** என்று தன் மனதிற்குள் வருத்தத்தோடு கூறிக்கொள்கிறான். பிறகு மாப்பிள்ளையின் சகோதரி அவனிடம் இவர்களில் ஒருவர் என் தம்பி, மற்றொருவர் எனது கணவர் என்பதைக் கூறி அவனது சந்தேகத்தைத் தீர்த்து வைப்பதாக நிகழ்ச்சி அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

### 6. உயரப் பறந்தாலும், ஊர்க்குருவி பருந்தாக முடியுமா?

சுயம்பு கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும்போது திருநங்கையாக மாறிவருகிறான். இத்தருணத்தில் அவனது கல்லூரியில் கூடைப்பந்து போட்டி ஒன்று நடக்கிறது. அப்போட்டியைக் காண செல்கிறான் சுயம்பு. அங்கு அப்போட்டியைக் காண மருத்துவக் கல்லூரி மாணவி ஒருத்தியும் வருகிறாள். சுயம்பு மருத்துவக்கல்லூரி மாணவியின் அருகில்

அமருகிறான். அவளிடம் பேசவும் செய்கிறான். அதற்கு அந்த மாணவி கத்தி கூச்சலிடுகிறாள். இதனால் இரண்டு கல்லூரி மாணவர்களிடையே மோதல் உருவாகிறது. பிறகு, கல்லூரி முதல்வர் சுயம்புவின் தந்தையை அழைத்து அவரிடம் சுயம்புவின் டி.சி.யைத் தந்து அவனை அனுப்பி வைத்துவிடுகிறார். பிறகு சுயம்பு தன் ஊரான நல்லாம்பட்டிக்கு வந்து விடுகிறான். அதற்குள் ஊரில் உள்ளவர்கள் சுயம்பு, சென்னையில் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டதாக வதந்தியைப் பரப்புகின்றனர். இதற்கிடையில் ஊர் மக்களில் சிலர் சுயம்புவின் தந்தை பிள்ளையாரிடம் சென்று சுயம்புவிற்கு 'திருமணம் செய்துவையுங்க' என்று சிபாரிசு செய்கின்றனர். மற்றொருவர்,

**"உயரப் பறந்தாலும், ஊர்க்குருவி பருந்தாக முடியுமா?" ((வாடாமல்லி,ப.87)**

- என்று கூறி சுயம்புவை ஏளனம் செய்கின்றார். அதனைக் கேட்ட பிள்ளையார் நீ ஊருக்குள் போகாத பேசுபவர்கள் ஆயிரம் பேசுவார்கள். நீ மனம் தளராது தைரியத்துடன் இரு என்று கூறும் விதமாக ஆசிரியர் இப்பழமொழியை அமைத்திருப்பதைக் காணமுடிகிறது.

இதன்வழி, ஒருவர் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளபோது 'ஒவருக்கு உதவி செய்ய வேண்டுமே தவிர உபத்தரம் செய்தல் கூடாது' எனும் உயரிய கருத்தை ஆசிரியர் 'பிள்ளையார்' பாத்திரத்தின்வழி அறிவுறுத்துவதை அறிய முடிகிறது.

### 7.யானை சேறுல சிக்குனால், தவளைகூட கிண்டல் பண்ணுமாம்

சுயம்பு திருநங்கையாக மாறிவிடுகிறான். இதனால் கல்லூரி படிப்பையும் நிறுத்தி விடுகிறான். தனது வீட்டில் இருக்கும்போது, அவனுக்கு சேலை கட்டும் ஆசை வருகிறது. அதனால் அவன் வீட்டில் யாருக்கும் தெரியாமல் அவனது அறைக்குள் சேலையைக்கட்டிக்கொண்டு திரிகிறான். அந்நேரம் பார்த்து அவனுடைய அக்கா மரகம் அங்கு வந்து விடுகிறாள். அதிர்ச்சி அடைகிறாள். தம்பி! என் தம்பி உனக்கு என்னடா ஆனது? என்று ஒப்பாரி வைக்கிறாள். ஒப்பாரியைக்கேட்டு அங்கு வந்த அவனுடைய தாய் வெள்ளையம்மா அவனுக்கு இறந்துபோன சீதாலட்சுமி பேயாகப் பிடித்துள்ளதாக எண்ணி அவனுக்குப் புத்திமதி கூறி அமைதியாக இருக்கும்படி சமரசம் செய்கிறாள். அப்போது வெள்ளையம்மாளிடம் மரகதம் இச்செய்தியை அண்ணி, குழந்தைகளுக்கு தெரியக்கூடாது என்று கூறுகிறாள். அதற்கு அவளது தாய், அவள் அண்ணி அவள் வீட்டுக்கு சென்றுவிட்டதையும் ; நான்கு நாள்களுக்கு வரமாட்டாள் எனவும் கூறியதைக் கூறுகிறாள். பேரப்பிள்ளைகளின் படிப்பு கெட்டுப்போகும் என்று தான் கூறியதற்கு, 'உங்க பரம்பரைக்குக் கடவுளே வந்து காலேஜ் நடத்துனாலும் படிப்பு ஏறாது' என்று அவள் கூறியதைக் கூறுகிறாள். இதைக் கேட்டவள்,

**"யானை சேறுல சிக்குனால், தவளைகூட கிண்டல் பண்ணுமாம்"(வாடாமல்லி,ப.99)**

- என்று கூறி வருந்துகிறாள்.

பெண்கள் திருமணமாகி ஒரு வீட்டிற்கு வரும்போது அங்குள்ள மாமியாரை மதித்து நடந்து வாழ்ந்தாள் புவகுந்த வீடும் பொறந்த வீடாக அமைய வாய்ப்புள்ளது. அதைவிட்டு புகுந்த வீட்டில் ஏதாவது இன்னல்கள் ஏற்படும் சூழலில் அந்தக்குடும்பத்தின் பரம்பரையை தவறாக பேசுதல்கூடாது. குடும்பங்களில் வேற்றுமை பல இருப்பினும் குடும்பத்தின் பெரியவர்களை மதித்து நடக்க வேண்டும் அவ்வாறு மதித்து வாழ்ந்தால் வாழ்வில் பல நன்மையை அடையலாம் எனும் உயரிய வாழ்வியல் விழுமியத்தை ஆசிரியர் பதிவு செய்திருப்பதை அறியஇயல்கிறது.

## 8.கீழ விழுந்தாலும், மீசையில் மண் படலியாம்

நல்லாம்பட்டி எனும் ஊரில் பிள்ளையார் என்பவர் வசித்து வருகிறார். அவரது மகன் சுயம்பு. அவன் சென்னையில் இன்ஜினியரிங் படித்து வருகிறான். அங்கு படித்துக் கொண்டுடிருக்கும்போது திருநங்கையாக மாறி விடுகிறான். அதனால் தான் கல்லூரிக்குப் போக மாட்டேன் என்று வீட்டிற்கு வந்து விடுகிறான். அவனிடம் அவனது தந்தை பிள்ளையாரும், அவனது அண்ணன் ஆறுமுகப்பாண்டியும் கல்லூரிக்குச் செல்லுமாறு மிகவும் கடுமையாக நடந்து கொள்கின்றனர். அப்போது அவனது தாய் அவனுக்குச் செத்துப்போன சீதாலட்சுமியின் ஆவிதான் சுயம்புவை பிடித்துள்ளது என்று கூறுகிறாள். அப்பேயை விரட்டுவதற்காக ஊரில் பூசாரியாகவும் பெரிய மந்திரவாதியாகவும் பேய் விரட்டுபவளாகவும் விளங்கும் பூவம்மாவை அழைத்து வரும்படி கணவர் பிள்ளையாரிடம் கூறுகிறாள். பூவம்மா எப்போது தருமரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டாளோ அப்போதிலிருந்து பிள்ளையாருக்கு அவள்மீது கோபம். பேசுவதில்லை. தற்போது அவளிடம் தனது மகனுக்கு பேய் விரட்டும்படி கேட்க வேண்டிய சூழலை எண்ணி வருந்துகிறார். தன் மனைவியிடம், பூவம்மாவை வழியில் பார்த்தேன். வீட்டுக்கு ‘வா அக்கா’ என்றேன். உடனே புறப்பாட்டாள். ஆனால், ‘அவள் வீட்டுக்குப் படியேறி சென்று அழைக்கவில்லை’ எனக் கூறியபோது வெள்ளையம்மா, **“கீழ விழுந்தாலும், மீசையில் மண் படலியாம்”(வாடாமல்லி,ப.102)** என்கிறாள். குடும்ப உறவுகளுக்குள் பகைமை ஏற்படுவது இயல்பே. எனினும் அவ்வாறு ஏற்படும் பகையானது காலங்கள் பல சென்ற பிறகு மறந்து, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து அனைவரும் சேர்ந்து வாழ வேண்டும் எனும் உயரிய வாழ்வியல் மதிப்பை வெளிப்படுத்தும் விதமாக இப்பழமொழியை அமைத்திருப்பதை அறியமுடிகிறது.

## 9.விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சம்

திருநங்கையான சுயம்பு வீட்டை விட்டு வெளியேறி டெல்லி சென்றடைகிறான். அங்கு குரு திருநங்கை ‘கங்காதேவி’ என்பவரைச் சந்திக்கிறான். அவள், சுயம்புவை வளர்ப்பு மகளாக தத்தெடுத்துக் கொள்கிறாள். அப்போது அங்குள்ள மற்ற திருநங்கைகள் ‘எல்லாச் சொத்தும் ஒனக்குத்தாம்மா’ என்று சுயம்புவிடம் கூறுகின்றனர். அதற்கு, சுயம்பு,

**“விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சம்”(வாடாமல்லி,ப.226) –** என்கிறான்.

எல்லாம் போய்விட்டது. தன் சகோதரியைவிட இந்தச் சொத்து தனக்கு பெரியதா? எனக் கேட்பதாக ஆசிரியர் இப்பழமொழியைப் படைத்திருப்பதைக் காணமுடிகிறது.

ஒருவனுக்கு வாழ்க்கையில் மிகப்பெரிய சொத்து அவருடைய உறவினர்களே ஆவர். அவ்வாறு இல்லாமல் மற்ற சொத்துகள் அனைத்தும் வீண் என்பதை ஆசிரியர் 'சுயம்பு'வின் மூலம் அறிவுறுத்துகிறார். தன் உறவினர்களை இழந்து வாழும்போது ஒருவருக்குக் கிடைக்கும் சொத்து **"விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சம்"(வாடாமல்லி,ப.226)** போன்றது ஆகும். உறவுகள் இன்றி தன்னிடம் உள்ள சொத்துக்கள் வீண் என்று கூறும் விதமாக இப்பழமொழி அமைத்திருப்பதை அறிய முடிகிறது.

**10.மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதடி**

சுயம்புவை திருநங்கைகளின் குரு 'கங்காதேவி' மகளாக தத்து எடுத்துக் கொள்கிறாள். தனக்குப் பிறகு அடுத்த திருநங்கைகளனின் குரு 'சுயம்பு' என்கிற 'மேகலை' என்றும் அறிவித்து விடுகிறாள். அப்போது வானொலியில், இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இறந்த செய்தி ஒலிக்கிறது. அச்செய்தியைக் கேட்ட கங்காதேவி ஆழ்ந்த துயரத்தில் மூழ்கிறாள். அதனைக் கண்ட மேகலை 'நான் மகளான நல்ல நாள் அன்றே கெட்ட நாளாகும்படி இப்படி நடந்துவிட்டதே' என்று வருந்துகிறாள். அப்போது லட்சுமி என்ற திருநங்கை,

**"மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதடி"(வாடாமல்லி,ப.241)**

- என்கிறாள். திருநங்கையான கங்காதேவிக்கு மகளானதற்கும், இந்தியப் பிரதமர் இறப்பிற்கும் ஒரு சம்மந்தமும் இல்லை என்று கூறி அவளை அமைதிப்படுத்துவதாக இப்பழமொழி அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

வாழ்க்கை என்பது இன்பம், துன்பம் இரண்டும் கலந்ததே ஆகும். அவ்வாறு இன்பம் வரும் போது மகிழ்ந்து, துன்பம் ஏற்படும்போது அதனை எண்ணி வருந்தாது நாம் தொடர்ந்து செயல்பட வேண்டும் எனும் உயரிய வாழ்வியல் கருத்துகளை ஆசிரியர் 'லட்சுமி' என்ற பாத்திரத்தின்வழி கூறி அறிவுறுத்துவதைக் காணமுடிகிறது.

**11.கரும்பு தின்ன கூலியா**

சுயம்பு வீட்டை விட்டு வெளியேறி டெல்லியில் கங்காதேவி எனும் திருநங்கையிடம் சேர்ந்து மகளாக வாழ்கிறான். அப்போது, சுயம்புவிடம், கங்காதேவி, நம் முன்னோர்கள் நமக்காக எழுதி வைத்திருக்கிற புத்தகங்களைப் படித்தால் அறிவு பெருகும். எனவே, எனக்கு வாழ்நாள் முழுவதும் நீ செய்யும் உதவியாக தினமும் காலையிலும், மாலையிலும் ஒரு மணிநேரம் நான் சொல்கிற புத்தகங்களைப் படித்துக் காட்டணும். படித்துக்காட்டுவியா? என்கிறாள். அப்போது சுயம்பு,

**"கரும்பு தின்ன கூலியா"(வாடாமல்லி,ப.252)**

- என்கிறாள். இதன்வழி கல்வியின் இன்றியமையாமைப் பற்றி ஆசிரியர் சுயம்புவின் கூற்றுவழி கூறியிருப்பதைக் காணமுடிகிறது.

### 12.எழும்பில்லா நாக்கு எப்படி வேணுமுன்னாலும் பேசும்

சுயம்பு திருநங்கையாக மாறிய பிறகு வீட்டை விட்டு வெளியேறுகிறான். அதனால் அவனது அக்கா மரகதத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம் நடைபெறாமல் நின்றுவிடுகிறது. சிறிது காலத்திற்குப் பிறகு தம்பியைக் காணாத வருத்தத்தில் மரகதம் தற்கொலை செய்து கொள்கிறாள். தற்கொலைக்கு முன்பு ஒரு கடிதத்தை எழுதுகிறாள். அக்கடிதத்தில்,

**"எழும்பில்லா நாக்கு எப்படி வேணுமுன்னாலும் பேசும்"(வாடாமல்லி,ப.281)**

- என்ற பழமொழியை எழுதி, 'தான் திருமணம் நின்று விட்டதால் தற்கொலை செய்து கொள்ளவில்லை. உன்னைக் காணாமல் அக்காவால் வாழ முடியாது அதனால் தற்கொலை செய்து கொள்கிறேன். யார் எது சொன்னாலும் என் மனம் தம்பி உனுக்குப் புரியம்' என்று எழுதி வைத்திருப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஒருவர் இறப்பதற்கு மற்றொருவர் செய்யும் செயல்தான் காரணம் என்று கருதுவது தவறு. ஒருவர் இறக்க ஒருவர் மீது வைத்திருக்கும் அன்பும் ஒரு காரணம் எனும் சிறந்த விழுமியத்தை வெளிப்படுத்தும் விதமாக ஆசிரியர் இப்பழமொழியை அமைத்திருப்பதைக் காணமுடிகிறது.

**தொகுப்புரை**

- துஷ்டனைக் காணும்போது தூர விலகியிருப்பது நன்மையை நல்கும்.
- ஒருவருடைய துன்பம் மற்றவர்க்கு வருத்தம் தராமலும் போகும்.
- உதவி செய்பவர்களை ஏளனம் செய்தல் தவறு.
- சிறியோர் பெரியோரை எள்ளி நகையாடுதல் தவறு.
- எலும்பில்லா நாக்கு எப்படி வேண்டுமானாலும் பேசும்

– போன்ற பல உயரிய விழுமிய கருத்துகளையும் ஆசிரியர், பழமொழியின் மூலம் 'வாடாமல்லி'யில் எடுத்துரைத்திருப்பதைக் காணமுடிகிறது.

**துணைநூற் பட்டியல் :**

1.சமுத்திரம்.சு,'வாடாமல்லி',வானதி பதிப்பகம்,13,தீனதயாளுதெரு,தி.நகர்,சென்னை-600017, இரண்டாம் பதிப்பு,மே - 1997.

2.தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு,மறுபதிப்பு - 1955